மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

6—

மாவட்ட இதரச் சாலை

***313—திரு. ம. சிந்தனை செல்வன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், சேத்தியாதோப்பிலிருந்து காட்டுமன்னார்கோவில் வழியாக மயிலாடுதுறை செல்லும் மாவட்ட இதரச் சாலையை மாநில நெடுஞ்சாலையாக மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், சேத்தியாதோப்பு முதல் காட்டுமன்னார்கோவில் வழியாக மயிலாடுதுறை செல்லும் ODR சாலையை மாநில நெடுஞ்சாலையாக மேம்படுத்தும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.*

2021 செப்டம்பர் 1]

திரு. ம. சிந்தனை செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோவில் பகுதி என்பது முழுக்க முழுக்க விளைநிலங்களைக் கொண்டிருக்கிற ஒரு வேளாண் மண்டலம். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கப்பட்ட சற்றேறக்குறைய 14 கிலோ மீட்டர் நீள கரையைக் கொண்ட மிகப் பெரிய வீராணம் ஏரி அங்கே அமைந்திருக்கின்றது. இந்தச் சாலை உருவானால், மிகப் பெரிய அளவிலே போக்குவரத்து இணைப்பு உருவாக்கப்பட்டு, அந்தப் பகுதி மக்கள் கல்வியிலும், பொருளாதாரத்திலும் மேம்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே, அந்தச் சாலையை மாநில நெடுஞ்சாலையாகத் தரமுயர்த்தித் தர வேண்டியது அவசியம் என்று கருதுகிறேன். ஒரு தொழிற்சாலைகூட இல்லாத அந்தப் பகுதி வேளாண் மண்டலமாக இருக்கின்ற காரணத்தினால், இந்தப் போக்குவரத்து இணைப்பு அந்தப் பகுதிக்கு மிகப் பெரிய வரமாக இருக்கும். இதை அரசு கனிவோடு பரிசீலனை செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள் குறிப்பிட்ட இதே சாலையில்தான், மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களுடைய சொந்த ஊரான முட்டம் அமைந்திருக்கிறது. எனவே, அந்தச் சாலையை அமைக்க வேண்டுமென்பதிலே அவரும் கண்ணும்கருத்துமாக இருந்து, பலமுறை என்னிடத்திலே திரு. ம. சிந்தனை செல்வன் அவர்களோடு அவரும் இணைந்து இந்தச் சாலை வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். சேத்தியாதோப்பு முதல் காட்டுமன்னார்கோவில் வழியாக மயிலாடுதுறை செல்லும் சாலையானது கீழ்க்கண்ட சாலைகளை உள்ளடக்கியது:*

முற்பகல் 10-05

வீராணம் ஏரிக்கரை இருவழிச் சாலை 7 மீட்டர் அகலம்; MDR *சாலை. மன்னார்குடி-ஒமம்புலியூர் இடைவெளிச் சாலை 5.5 மீட்டர் அகலம்;* ODR *சாலை. முட்டம் சாலை, மொத்தம் 3 கிலோ மீட்டர்;* ODR *சாலை. முடிகண்டநல்லூர்-வக்கரமாரி சாலை 5.5*

மீட்டர் அகலம்; ODR *சாலை. வைத்தீஸ்வரன்கோவில்-கீழணை சாலை நீளம் 0.400 கிலோ மீட்டர்;* State Highways *என்கிற காரணத்தினால் 7 மீட்டர் அகலம். நாராயணமங்கலம் சாலையின் மொத்த நீளம் 4.800 கி.மீ.* ODR *சாலை. மயிலாடுதுறை-பட்டவர்த்தி சாலையின் மொத்த நீளம் 7.200 கி.மீ., 5.5 கி.மீ.* MDR *சாலை. ஆக, அந்தச் சாலைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அளவையில் இருக்கின்றன. இந்தச் சாலைகள், சில இடங்களில்* ODR *ஆகவும், சில இடங்களில்* MDR *ஆகவும், இன்னும் சில குறிப்பிட்ட, குறைந்த இடங்களில்* State Highways *ஆகவும் இருக்கின்றன. எனவே, இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து, எவ்வாறு சாலைகளைப் போடலாம் என்பதற்கான திட்டத்தைத் தீட்ட வேண்டும் என்று துறையிடம் நான் கேட்டிருக்கிறேன். எனவே, விவரங்கள் வந்தவுடன் முறையாக இங்கு பதிலளிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.*

திரு. ம. சிந்தனை செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோவிலிலிருந்து மயிலாடுதுறை வரையிலுமாவது இந்தச் சாலைகள் ஒழுங்குபடுத்தப்படுமானால் அது சிறப்பாக இருக்கும். சென்னையிலிருந்து திருவாரூர் சென்றடைவதற்கு ஒரு மிகச் சிறப்பான பாதையாக, நீங்கள் எல்லோரும் வருகிறபோது ஓர் அற்புதமான ஏரியைக் கண்டுகளிக்கக்கூடிய அளவிலான சாலையாக அது அமையும். ஆகவே, காட்டுமன்னார்கோவிலிலிருந்து மயிலாடுதுறை வரையிலுமாவது சாலை அமைக்க அரசு பரிசீலிக்க முன்வர வேண்டுமெனப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலைகளெல்லாம்* ODR, MDR, SH *என்று பல்வேறு வகைப்படுத்தப்பட்ட சாலைகளாக இருப்பதால், அவற்றை ஒன்றாக இணைப்பதற்குத் திட்டம் தீட்ட வேண்டும் என்று துறையிடம் கூறியிருப்பதாக இப்போதுதான் நான் கூறினேன். இந்தச் சாலைகளினுடைய நீளம், 40.70 கி.மீ. அதாவது, சுமார் 40 கி.மீ. தூரமுள்ளது. 'மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சாலை*

2021 செப்டம்பர் 1]

மேம்பாட்டுத் திட்டம்' என்ற திட்டத்தை நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக இந்த முறை அறிவித்திருக்கிறோம். இந்தத் திட்டத்தின்கீழ், 40.70 கி.மீ. தூரமுள்ள இந்தச் சாலையில் பணிகள் மேற்கொள்ள இந்த ஆண்டே கட்டாயம் முன்னுரிமை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் குளச்சல் சட்டப் பேரவைத் தொகுதியின் முக்கியமான பகுதி திங்கள் நகர் ஆகும். திங்கள் நகர்–தோட்டியோடு சாலையின் அகலம் மிகவும் குறைவாக உள்ளது. மொத்தமாக 15 அடி அகலம்தான் இருக்கும். அந்தச் சாலையில் பல்லாயிரக்கணக்கான வாகனங்களை தினமும் இயக்க வேண்டியிருக்கிறது; ஆயிரக்கணக்கான மக்கள் தினமும் அந்தச் சாலை வழியாகச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. நெரிசலான பகுதியாக இருக்கிறது; கல்லூரிகள் இருக்கின்றன; வியாபாரச் சந்தைகள் இருக்கின்றன; பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதியிலே போக்குவரத்து அதிகமாக இருப்பதால், மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: எனவே, தோட்டியோடு–திங்கள் நகர் சாலையை விரிவாக்கம் செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலையைப் பொறுத்தவரையில், இந்த முறை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இருவழிச் சாலைகளையெல்லாம் நான்கு வழிச் சாலைகளாக மாற்ற வேண்டும்; இடைவழிச் சாலைகளையெல்லாம் இருவழிச் சாலைகளாக மாற்ற வேண்டும் என்று துறைக்கு ஆணையிட்டிருக்கிறார்கள்.

அந்த வகையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலை, இருவழிச் சாலையாக இருந்தால், அது நான்கு வழிச் சாலையாகவும், அது இருவழிச் சாலையாக இல்லாதிருந்தால், அதை இருவழிச் சாலையாகவும் மாற்ற முன்னுரிமை அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள்.*

திரு. இரா. அருள்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். சேலத்திலிருந்து பெங்களூரு செல்லும் பிரதான சாலைக்கும், சேலத்திலிருந்து சித்திரக்கோவில் செல்லும் பிரதான சாலைக்கும் பிரதான இணைப்புச் சாலை வேண்டும். சேலம் அரசு பொறியியல் கல்லூரியிலிருந்து திருமலைகிரிக்கு பாகல்பட்டி, சர்கார்கொல்லப்பட்டி வழியாகச் செல்லும் அந்தச் சாலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருவழிச் சாலையாக மாற்றித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்த மாவட்டத்திற்கு ஆய்வுக்குச் சென்றபோதே மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அவர்கள் இந்தச் சாலையைப் பற்றி குறிப்பிட்டுச் சொன்னார்கள். அப்போதே நான் அந்தப் பகுதியினுடைய கோட்டப் பொறியாளர் அவர்களிடம், சாலை சம்பந்தமாக, நில எடுப்பு செய்யப்பட வேண்டுமா அல்லது அரசுப் புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றனவா என்பதைக் கண்டறியச் சொல்லியிருக்கிறேன். விவரம் என்னிடத்தில் வந்தவுடன், அந்தச் சாலைக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

7—

சட்டக் கல்லூரி

***1662—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—